முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1344

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.06.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. பேருலகை காக்க வந்த ஞானியே
பிரபஞ்சம் உன் தர்மத்தின் வழி நடக்க
மாறுதலாய் ஞானலோக மாற்றம்
மக்களை காக்கின்ற ஞானயுகமாற்றம்
2. மாற்றம் எல்லாம் நடந்தேறும் எனக் கூறி
மகான் சுப்ரமணியர் யானும்
ஆற்றல்பட ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 21 ம் நாள், 04.06.2023, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கமகான் உந்தனுக்கு எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் சக்தி
உலகமெல்லாம் தர்ம சக்தியாக
குறைவின்றி எங்கும் வளர்ந்துவர
குரு அரங்கன் தொண்டர்படை பெருகிவர
4. வருகவே வையகம் ஞானவான்கள்
வல்லமைபட நிறைந்த பூமியாக
வருமுலகில் கண்டு இனிதே மாற்றம்
வந்தடையும் ஞானிகள் காலமாக
5. ஆகவே அரங்கன் விரும்புகின்ற வண்ணம்
அகிலத்தில் நவகோடி மேலான சித்த பெருமக்கள்
பெருமக்கள் அரங்கன் தொண்டர்களாகவே
பிசகின்றி பெருகி உலகமெல்லாம்
6. வருங்காலம் ஞான ஆட்சிக்காலமாக
வந்தடையும் அரங்கன் ஆசிபட
ஆசிபட ஆறுமுகன் யான் உள்ளிருந்து
அற்புதம் நிகழ்த்த இந்த மாற்றம் அகிலம் சடுதி காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—